**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 119/2009**
**DEFENSE SIDE WITNESS NO. 1 (DW.1)**

| | |
|---|---|
| **Name** : முகமது சபிக் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**2,3** எதிரிகள் ஆஜர். **(1** வது எதிரி இறந்துவிட்டார்)
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 119/2009 11.03.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.10 AN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் மானாம்பு சாவடியில் குடியிருந்து வருகிறேன். நான் இந்த வழக்கில் 2 வது எதிரி ஆவேன். நான் தஞ்சாவூர் கசரத் சந்தா உசேன் தர்காவில் பரம்பரை முத்தவல்லியாக இருக்கிறேன். இந்த வழக்கின் 3 வது எதிரி எனது அண்ணன் முகமது ஷெரிக். அவரும் மேற்படி தர்காவில் இணை முத்தவல்லியாக இருக்கிறார். 1 வது எதிரி எனது தந்தை முகமது சாலியா எங்களுக்கு முன்பாக மேற்படி தர்காவில் பரம்பரை முத்தவல்லியாக இருந்தார். எங்கள் மூவர் மீதும் இவ்வழக்கின் வாதி பொய்யான குற்ற சாட்டுகளை கூறி வழக்கு தொடர்ந்துள்ளார். அது தொடர்பாக எங்கள் தரப்பை நிருபணம் செய்ய நான் எனது தரப்பில் 5 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்(**அரசு தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்கள் அரசு தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது** ). நான் அதன் அசல் ஆவணங்களை சென்னையில் நடைபெற்றும் வரும் வழக்கில் தேவைபடுவதால் எனது வழக்கறிஞர் அவர் வசம் வைத்துள்ளார். எனவே நான் இவ்வழக்கில் நகலை தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றம் அதனை ஏற்றுகொள்ளுமாறு கேட்டு கொள்ளுகிறேன்.

2. நான் மேற்படி தர்கா சொத்துகள் ஆக்கிரமிப்பு இருப்பதால் அது சம்மந்தமாக மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலருக்கு கொடுத்த **கடித நகல் எமசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசாஆ 8 வழங்கிய முகமது இஸ்மாயில் என்ற நபர் மேற்படி காலகட்டத்தில் பிற்பட்டோர் நல அலுவலகத்தில் பணிபுரிந்ததை காட்டப்படும் **எமசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது** . எனது தரப்பபில் தாக்கல் செய்யப்ட்டுள்ளசெய்திதாள் விளம்பரம் 2000 வருடத்தில் தினந்தந்தியில் பிரசுரிக்கப்பட்டது. மேற்படி வக்பு ஆக்கிரமிப்பு சொத்துகளை மீட்பதற்காகவும், இவ்வழக்கில் தர்காவிற்கு சொந்தமான ஆக்கிரமிப்பு சொத்துகளை

மீட்பதற்காகவும் கொடுக்கப்பட்டது. அந்த செய்திதாள் விளம்பரம் **எமசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது .**

3. நான் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலரை அணுகி2004 ல் மனு கொடுத்தேன் . நடவடிக்கை எடுப்பதாக சொன்னார்கள். பின்பு சில மாதங்கள் கழித்து அசாஆ 8 ஆவணங்களை நான் நேரடியாக பெற்று வக்பு வாரிய அலுவலகத்தில் கொடுதேன். வட்டாச்சியர் அலுவலகத்தில் மேற்படி ஆக்கிரமிப்புகளை சர்வே செய்வதற்கு பணம் செலுத்த சொன்னார்கள். நான் பணம் செலுத்தி விட்டு அலுவலகத்திற்கு சென்று கேட்டபோது வக்பு வாரியத்தில் மனு கொடுக்க சொன்னார்கள். 2005 ல் வக்பு வாரிய முதன்மை செயலாளர் சென்னை ல் மனு கொடுக்க சொன்னார்கள். நானும் மனு கொடுத்தேன். நில அளவை உத்தரவை பெற்றேன். 2005 ல் அனைவர் முன்னிலையிலும் மேற்படி ஆக்கிரமிப்பு நிலம் நில அளவை செய்யப்பட்டது. அப்போது வாதியும் அந்த இடத்திலிருந்தார். நில அளவை அறிக்கையினை சென்னைக்கு அனுப்பி வைப்பதாகவும், அங்கு தான் ஆக்கிரமிப்பு நிலத்தினை மீட்பதற்கு உத்தரவு போட்ட பின்பு, மாவட்ட ஆட்சியரை அணுகி இது சம்மந்தமாக நடவடிக்கை எடுப்பதாக சொன்னார்கள். வக்பு வாரிய கண்காணிப்பாளர் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு நில அளவை செய்வதற்காக அனுப்பிய கடிதம் **எமசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது .**

**4.** வாதி தரப்பில் மேற்படி அசாஆ 8 னை போலியானது என்று கூறி தாக்கல் செய்துள்ளார். அந்த ஆவணம் போலியானது அல்ல என்று நிருபணம் செய்வதற்காவே மேற்படி ஆவணங்களை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அசாஆ 8 ஆவணம் சம்மந்தமாக நான் வக்பு வாரிய தீர்ப்பாயம், சென்னையில் OA No. 59/2018 தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது.

(**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கேட்டதால் ஒத்தி வைக்கப்படுகிறது. )**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.